IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 111/2018 |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Jeganathan | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **25-08-2022**

CHIEF EXAMINATION :

முதல் விசாரணை (வா.சா.1 ஆஜர்.) சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | குறியீட்டு எண் |
|---|---|---|---|
| 1 | | தாவா சொத்தின் பூஸ்துதி அமைப்பைக் காட்டக்கூடிய மாதிரி வரைபடம் தாக்கல் செய்கிறேன். **(மாதிரி வரைபடத்தை 1ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டு, அவற்றை வாதியே நிரூபணம் செய்ய வேண்டும் என ஆட்சேபணை செய்யப்பட்டு, ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்பட்டது)** | வா.சா.ஆ.1 |
| 2 | 20.06.2008 | நான், என்னுடைய தாயார் மற்றும் என்னுடைய சகோதரர் ஆகியோர்கள் குடும்ப சொத்துக்களை பொறுத்து செய்து கொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். | வா.சா.ஆ,2 |
| 3 | 20.06.2008 | நானும் 1ம் பிரதிவாதியும் தாவா சொத்தை பொறுத்து இருதரப்பினரும் புழங்கி கொள்வதற்காக ஏற்படுத்திகொள்ளப்பட்ட சம்மத பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **(மேற்படி சம்மத பத்திரம் பதிவு செய்யப்படாத பத்திரம் என்பதால் 1ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டு, ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்பட்டது)** | வா.சா.ஆ,3 |
| 4 | 26.05.2009 | எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை சபரிநாதன் என்பவருக்கு எழுதிகொடுத்த ஈடுகடன் பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். | வா.சா.ஆ.4 |
| 5 | 29.06.2009 | வா.சா.ஆ.4 ஈடுகடன் பத்திரம் என்னால் தீர்க்கப்பட்டு, அதனுடைய செல் வைக்கப்பட்ட ஈடுகடன் வரவு செல் ரசீது அசல் ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். | வா.சா.ஆ,5 |
| 6 | 30.12.2010 | தாவா சொத்தை நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து லட்சுமி என்ற விஜயலட்சுமி என்பவருக்கு எழுதிகொடுத்த ஈடுகடன் பத்திரத்தின் சான்றிட்ட ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். **(1ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அசல் ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என ஆட்சேபணை செய்யப்பட்டு, ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது)** | வா.சா.ஆ,6 |
| 7 | 05.12.2012 | எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை அனுபவம் செய்து கொள்வதற்கு நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து செய்து | வா.சா.ஆ.7 |

| | | | |
|---|---|---|---|
| | | கொண்ட ஒப்பந்த பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **<u>(மேற்படி ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்படாத பத்திரம் என்பதால் 1ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டு, ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்பட்டது)</u>** | |
| 8 | 29.08.2018 | தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பை 1ம் பிரதிவாதி பெயரில் பெயர் மாற்றம் செய்வதற்கு ஆட்சேபணை செய்யப்பட்டு 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய மனுவின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். **<u>1ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணத்திற்கு ஆட்சேபணை செய்யப்பட்டு, அவற்றை வாதியே நிரூபணம் செய்ய வேண்டும் என ஆட்சேபணை செய்யப்பட்டு, ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்பட்டது)</u>** | வா.சா.ஆ,8 |
| 9 | 31.08.2018 | தமிழ்நாடு மின் உற்பத்தி உதவி கணக்கு அலுவலர் (வருவாய் பிரிவு) அவர்கள் எனக்கு அனுப்பிய பதில் எனக்கு சார்பு செய்யப்பட்ட ஆவணத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். | வா.சா.ஆ.9 |
| 10 | - | தாவா சொத்தான சர்வே எண்.52/1ஏல் கட்டுப்பட்ட பட்டா எண்.292 1ம் பிரதிவாதி உலகநாதன் என்பவரின் பெயரில் உள்ள கணினி பட்டா இணையதள கணினி ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். | வா.சா.ஆ.10 |
| 11 | 03.09.2018 | பட்டா எண்.292 ரத்து செய்யக்கோரி கூட்டுப்பட்டாவாக வழங்க வாடிப்பட்டி வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட நினைவூட்டல் கடிதத்தின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். | வா.சா.ஆ.11 |
| 12 | | நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ,1 ஆகவும், நில அளவையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் புல எண்.52க்குண்டான புலப்பட வரைபடம் ஆகியவை நீ.ம.சா.ஆ,2 ஆகவும் தாக்கல் செய்ய்படுகிறது. | நீ.ம.சா.ஆ,1<br>மற்றும்<br>நீ.ம.சா.ஆ.2 |

மேற்படி ஆவணங்களையும் வாக்குமூலத்தையும் ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி